# உவமைத் தொடர்கள்

- உவமைத் தொடர்கள் என்பது, ஒரு பொருளை வேறு ஒரு பொருளுடன் ஒப்பிட்டு விளக்கும் தொடர்கள். உவமைத் தொடர்கள், ஒரு பொருளின் பண்பு, பயன், தொழில் ஆகியவற்றை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

## புதிய பாடப்புத்தகத்திலுள்ள உவமைத்தொடர்கள்:

- தாமரை இலை தண்ணீர் போல – பற்றின்மை
- மழை முகம் காணாப் பயிர் போல – வருத்தம்
- கண்ணினை காக்கும் இமை போல – பாதுகாத்தல்
- சிலைமேல் எழுத்து போல – நிலைத்திருத்தல்
- வெள்ளம் போன்ற இன்பம் – மிகுந்த இன்பம்
- கடல் போன்ற கவலை – மிகுந்த கவலை
- தேன் போன்ற மொழி – இனிமையான மொழி
- வில் போன்ற புருவம் – கூர்மையானது
- செந்தமிழும் சுவையும் போல – ஒற்றுமை
- அத்திபூத்தாற் போல – அரிய நிகழ்வு
- மழை காணாப் பயிர் போல – வாட்டம், வறட்சி
- உள்ளங்கை நெல்லிக்கனி போல – வெளிப்படைத் தன்மை
- பசுமரத்தாணி போல – எளிதில் மனதில் பதிதல்
- கண்ணை இமைகாப்பது போல – பாதுகாப்பு
- தாயைக் கண்ட சேயைப் போல – மகிழ்ச்சி
- இஞ்சி தின்ற குரங்கு போல – தவிப்பு/ விழித்தல்
- நகமும் சதையும் போல – ஒற்றுமை/ பிரியாமை
- எலியும் பூனையும் போல – பகை
- குடத்தில் இட்ட விளக்கு போல – மறைந்துள்ள திறமை
- குன்றின் மேல் இட்ட விளக்கு போல – வெளிச்சம், பயன்
- கிணற்றுத் தவளை போல – அறியாமை
- உள்ளங்கை நெல்லிக்கனி போல – தன் கையில் இருக்கும் பொருள்
- பசுமரத்து ஆணி போல – தெளிவாக
- அச்சாணி இல்லா தேர்போல – சரியான வழிகாட்டி இல்லாமை
- காக்கை உட்கார பனம்பழம் விழுந்தது போல – தற்செயல் நிகழ்வு
- கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல – எதிர்பாரா நிகழ்வு
- விழலுக்கு இறைத்த நீர் போல – பயனற்ற செயல்
- நெல்லிக்காய் மூட்டையைக் கொட்டினாற் போல – ஒற்றுமையின்மை

## பழைய பாடப்புத்தகத்திலுள்ள உவமை தொடர்கள்:

- அனலில் விழுந்த புழு போல – துன்பம்
- இலவு காத்த கிளி போல – ஏமாற்றம்
- மடை திறந்த வெள்ளம் போல் – தடையின்றி மிகுதியாக
- வேலியே பயிரை மேய்ந்தது போல – நயவஞ்சகம்
- அடியற்ற மரம் போல – வீழ்தல்
- மழை முகம் காணாப் பயிர் போல – வாட்டம்

- மலரும் மணமும் போல – நெருக்கம்
- பகலவனைக் கண்ட பனி போல – நீங்குதல்
- கிணற்றுத் தவளை போல – அறியாமை
- மலரும் மணமும் போல – இணை பிரியாமை
- உள்ளங்கை நெல்லிக்கனி போல – தெளிவு
- கீரியும் பாம்பும் போல – பகைமை
- அத்தி பூத்தாற்போல் – அரிய நிகழ்வு
- கல் மேல் எழுத்து போல – நிலைத்திருத்தல்
- காதில் ஈயத்தை காய்ச்சி ஊற்றியது போல – வெறுப்பு
- நிலவும் வானும் போல – ஒற்றுமை
- ஆடிக்காற்றில் உதிரும் சருகு போல – வீணாகுதல்
- ஆந்தை விழிக்கிறது போல – உறக்கமின்மை
- உரிய காலத்தில் பெய்த மழை போல – நன்மை
- எள்ளுக்குள் எண்ணெய் போல – இன்பம்
- பசுத்தோல் போர்த்திய புலி போல – நயவஞ்சகம்
- வெயில் பட்ட புழு போல – துன்பம்

## மேலும் அறிந்து கொள்வோம்:

- பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல – இன்பமிகுதி
- உடலும் உயிரும் போல – ஒற்றுமை
- இலவு காத்த கிளி போல – ஏமாற்றம்
- இருதலைக் கொள்ளி எறும்பு போல – தவிப்பு
- கடன்பட்டார் நெஞ்சம் போல – மனக்கலக்கம்
- அடியற்ற மரம் போல – வீழ்தல்
- பாம்பும் கீரியும் போல – பகை
- மலரும் மணமும் போல – ஒற்றுமை
- உயிரும் உடம்பும் போல – நட்பு
- சாதி என்னும் சாக்கடையில் புழு போல – மூடன்
- வெண்ணிலவும் வானும் போல – நட்பு
- வெந்தப்புண்ணில் வேல் பாய்ச்சியது போல – பெருந்துன்பம்
- அச்சில் வார்த்தாற் போல – உருவத்தில் ஒரே மாதிரி இருத்தல்
- கிணறு தோண்ட பூதம் கிளம்பினாற் போல – எதிர்பாராத துன்பம்
- அடுத்தது காட்டும் பளிங்கு போல – வெளிப்படுத்தல்
- தாமரை இலை தண்ணீர் போல – பட்டும்படாதும் இருத்தல்
- வளர்பிறை போல – வளர்தல்
- செவிடன் காதில் ஊதிய சங்கு போல – பயனிலாச் சொல்
- குடத்திலிட்ட விளக்கு போல – மறைந்துள்ள திறமை
- அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல – பொறுமையுள்ள பண்பாளர்
- மதில்மேல் பூனை போல – உறுதி இல்லாதது
- அத்தி பூத்தாற் போல – பெருமை
- இருதலைக் கொள்ளி எறும்பு போல – துன்பம்
- எலியும் பூனையும் போல – பகைமை

- நகமும் சதையும் போல – பெருநட்பு
- கடல் மடை திறந்தாற் போல – விரைவு
- மின்னாமல் இடி இடித்தது போல – எதிர்பாராத துக்கச் செய்தி
- அரியினோடு அரியினம் அடாப்ப போல – மன்னர்களோடு மன்னர்கள் போர் புரிதல்
- மண்ணுக்குள் மறைந்திருக்கும் நீரைப் போல – நுண்ணறிவு
- கும்பிட போன தெய்வம் குறுக்கே வந்தது போல – பார்க்க விரும்பிய ஒருவர் எதிரே வருவது
- தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்தது போல – கட்டிருள் வெளிச்சத்தால் நீங்கும்
- மேகம் கண்ட மயில் போல – மகிழ்ச்சி
- இலை மறை காய் போல – மறை பொருள்
- கீரியும் பாம்பும் போல – பகை
- பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கு ஆனது போல – எதிர்பாராத தீமை
- பசுமரத்து ஆணி போல – நிலையாக பதியும்
- வேலியே பயிரை மேய்ந்தது போல – கடமையின்மை
- விழலுக்கு இரைத்த நீர் போல – பயனின்மை
- சேற்றில் மலர்ந்த செந்தாமரை போல – குடிப்பிறப்பின் சிறப்பு
- வளர்த்த கடா மார்பில் பாய்வது போல – நன்றியின்மை
- வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவது போல – அறிவற்ற தன்மை
- கண்ணைக் காக்கும் இமை போல – பாதுகாப்பு
- உமி குற்றி கை வருத்தல் போல – வருத்தம்
- மாரிக்காலத்து மழை போல – தக்க உதவி
- புளியம்பழமும் ஓடும் போல – ஒட்டாமை
- குருடன் கண் பெற்றது போல – பெருமகிழ்ச்சி
- கண்ணைக்கட்டி காட்டில் விட்டது போல – பயம்
- ஈன்றோர் நீத்த குழவி போல – துன்பம்
- இனம் பிரிந்த மான் போல – தவிப்பு
- நீர்க்குள் பாசி போல – மூர்க்கர்களுடைய நட்பு
- முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போல – இயலாத செயல்
- யானை வாயில் போன கரும்பு போல – துன்பம்
- அடைகாத்த கோழி போல – பாதுகாப்பு
- கோடரி காம்பு போல – தமிழர் தமிழைச் சிதைத்தல்
- இடியோசை கேட்ட நாகம் போல – அச்சம்
- அலையில் அகப்பட்ட துரும்பு போல – அலைதல்
- ஆலையில் அகப்பட்ட கரும்பு போல – துன்பம்
- சுடர் விளக்காயினும் தூண்டு கோல் போல – ஊக்கப்படுத்துதல்
- கடலில் கரைத்த காயம் போல – பயனின்மை
- தோண்டத் தோண்ட நீர் சுரத்தல் போல – பெருகுதல்
- ஊமை கண்ட கனவு போல – இயலாமை
- பூவும் மணமும் போல – நட்பு

- நீர்மேல் எழுத்து போல – நிலையற்ற தன்மை
- முடவன் கொம்புத் தேவனுக்கு ஆசைப்பட்டதைப் போல – பேராசை
- தான் உருகி ஒளிதரும் மெழுகு போல – தியாகம்
- வாள் போன்ற அறிவு – கூர்மை
- பாம்பின் வாய் தேரை போல – துன்பம்
- கடல்மடை திறந்தாற் போல – பேச்சு நடை
- உடுக்கை இழந்தவன் கை போல – இடுக்கண் களைதல்
- உடுக்கை இழந்தவன் கை போல – உதவி
- செம்புலப்பெயல் நீர் போல – ஒரு தன்மையாதல்
- புனையா ஓவியம் போல – சோகம்